RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 348 | டிசம்பர்.18 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பிரதமர் மோடிக்கு எத்தியோப்பியாவின் மிக உயரிய விருது வழங்கி கவுரவிப்பு



ஆப்பிரிக்கா, டிச.18-

அடிஸ் அபாபா (எத்தியோபியா): ஆப்பிரிக்கா நாடான எத்தியோப்பியாவின் மிக உயரிய 'கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா' விருதினை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி அந்நாட்டு பிரதமர் அபி அகமது அலி கவுரவித்துள்ளார்.

அரசு முறைப் பயணமாக ஜோர்டான் சென்ற பிரதமர் நரேந்திர மோடி அந்த பயணத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவுக்குச் சென்றார். அந்நாட்டுப் பிரதமர் அபி அகமது அலி, பிரதமர் மோடியை விமான நிலையத்துக்கே வந்து வரவேற்றார். இதையடுத்து, அடிஸ் அபாபாவில் உள்ள அறிவியல் அருங்காட்சியகத்துக்கு இருவரும் ஒரே காரில் சென்றனர். காரை, எத்தியோப்பியா பிரதமர் ஓட்டிச் சென்றார்.

இதையடுத்து, இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையே இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக, எத்தியோப்பியாவின் மிக உயரிய 'கிரேட் ஹானர் நிஷான் ஆப் எத்தியோப்பியா' விருதினை பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கி அபி அகமது அலி கவுரவித்தார்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, ''எத்தியோப்பியாவின் மிக உயர்ந்த சிவிலியன் விருது எனக்கு வழங்கப்பட்டுள்ளது. உலகின் மிகவும் பழமையான மற்றும் வளமான நாகரிகங்களில் ஒன்றால் கவுரவிக்கப்படுவது எனக்கு மிகுந்த பெருமைக்குரிய விஷயம். அனைத்து இந்தியர்கள் சார்பாக இந்த மரியாதையை நான் மிகுந்த பணிவுடனும் நன்றியுடனும் ஏற்றுக்கொள்கிறேன்'' என தெரிவித்தார்.

பின்னர் இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ''எத்தியோப்பியாவின் மிக உயரிய விருதை வழங்கிய எத்தியோப்பிய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் பிரதமர் அபி அகமது அலிக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கும் புதிய வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் எத்தியோபியாவுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கும் இந்தியா உறுதி பூண்டுள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விருதைப் பெறும் முதல் வெளிநாட்டுத் தலைவர் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாடுகளில் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்ட விருதுகளில் இது 28வது விருதாகும். இதையடுத்து, எத்தியோப்பிய நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி இன்று உரையாற்றினார்.

## ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து சர்ச்சை பேச்சு; மன்னிப்பு கேட்க காங்கிரஸ் மூத்த தலைவர் மறுப்பு



புனே, டிச.18-

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்து சர்ச்சை கருத்து கூறியது மஹாராஷ்டிரா முன்னாள் முதல்வரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான பிரித்விராஜ் சவுகான் தொடர்பாக மன்னிப்பு கேட்க மறுத்துள்ளார்.

புனேவில் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஆப்பரேஷன் சிந்தூரின் முதல்நாளில் நம் இந்திய ராணுவம் முற்றிலுமாக தோல்வியடைந்து விட்டதாக கூறியிருந்தார். அவரது இந்தப் பேச்சுக்கு பாஜ கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இந்திய ராணுவத்தை அவமதிக்க யாருக்கும் உரிமை கிடையாது என்றும், நாட்டின் நலன்களை விட, இந்திய ராணுவத்தை அவமதிப்பதே காங்கிரசுக்கு பழக்கமாகி விட்டது என்று பாஜ மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான கிரிராஜ் சிங் குற்றம்சாட்டியிருந்தார். மேலும், அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று பாஜ உள்ளிட்ட ஆளும் கட்சியினர் வலியுறுத்தினர்.

இந்த நிலையில், இன்று செய்தியாளர்களை சந்தித்த பிரித்விராஜ் சவுகான், இந்த விவகாரத்தில் மன்னிப்பு கேட்க முடியாது என்று திட்டவட்டமாக கூறியுள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது; நான் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும். கேள்வி கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. பஹல்காமில் நடந்த சம்பவம் குறித்து நியாயமான விசாரணை நடத்த வேண்டும். ஆப்பரேஷன் சிந்தூர் தொடர்பாகன விபரங்களை பொதுமக்களுக்கு வெளியிட வேண்டும். லோக் சபாவில் அறிமுகப்படுத்தப்பட்ட அணுசக்தி தனியார்மயமாக்கல் மசோதா மற்றும் ஷாந்தி மசோதா ஆகியவற்றில் இருந்து பொதுமக்களை திசைதிருப்பவே என்னுடைய கருத்துக்களை பெரிதுபடுத்துகின்றனர், என்றார்.

## ஐ.டி., பெண்ணுக்கு டிஜிட்டல் கைது மிரட்டல்: ரூ.2 கோடி கொடுத்து ஏமாந்த அவலம்

பெங்களூரு, டிச.18-

பெங்களூரு எச்.ஏ.எல்., விக்ஞான் நகரில் வசிப்பவர் பவிதா தாஸ், 57. ஒயிட்பீல்டில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மென்பொறியாளராக வேலை செய்கிறார். கடந்த ஆகஸ்ட் மாதம், மொபைல் பவிதாவின் போனுக்கு ஒரு அழைப்பு வந் தது. எதிர்முனையில் பேசிய நபர், தன்னை மும்பை சைபர் கிரைம் போலீஸ் என்று அறி முகம் செய்துள்ளார்.

### பத்மபூஷண் விருது பெற்ற விஞ்ஞானியிடம் ரூ.57 லட்சம் மோசடி

'உங்கள் பெயருக்கு, வெளிநாட்டில் இருந்து, 'புளூ டார்ட்' நிறுவன கூரியரில் பார்சல் வந்துள்ளது. அந்த பார்சலில் போதைப்பொருள் உள்ளது. உங்களை கைது செய்ய உள்ளோம்' என்று கூறினார். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர், 'அந்த பார்சல் தனக்கு வந்திருக்காது' என, பதிலளித்தார். எதிர்முனையில் பேசிய நபர், 'உங்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற வேண் டும் என்றால், நான் கூறும் வங்கிக்கணக்குகளுக்கு பணம் அனுப்ப வேண்டும்; வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது; வீட்டில் வைத்தே உங்களிடம் விசாரிப்பேன்' என்று மிரட்டியுள்ளார்.

இதனால் பயந்து போன பவிதா தாஸ், அவர்கள் கேட்ட பணத்தை ஏற்பாடு செய்வதற்காக, தனக்கு சொந்தமான ஒரு அடுக்குமாடி குடியிருப்பு வீடு மற்றும் இரண்டு நிலங்களை விற்று அந்த மோசடி கும்பல் கேட்கும் போதெல்லாம், பல வங்கி கணக்குகளுக்கு, 2 கோடி ரூபாய் வரை அனுப்பி உள்ளார்.

திடீரென அந்த நபரை தொடர்பு கொள்ள முடியவில்லை. டிஜிட்டல் கைது என்று மிரட்டி, தன்னிடம் இருந்து 2 கோடி ரூபாய் பறித்ததை பவிதா உணர்ந்தார். ஒயிட்பீல்டு சைபர் கிரைம் போலீசில் புகார் செய்தார். போலீசார் விசாரணையில் இறங்கி உள்ளனர்.

## 'ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டு இருப்பாரா ஊரக வேலை விவகாரத்தில் ஸ்டாலின் கேள்வி





சென்னை, டிச.18-

"ஊரக வேலை திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில், நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அதிமுக எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்கிறதா? உங்கள் தலைவி ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டிருப்பாரா?" என முதல்வர் ஸ்டாலின் எடப்பாடி பழனிசாமிக்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பச்சைத்துண்டு போட்டுக்கொண்டு பச்சைத் துரோகம் செய்பவருக்கு, மீண்டும் விவசாயிகள் கண்ணில் தெரியவில்லையா? கிராமப்புற ஏழை மக்களின் வயிற்றிலேயே அடிக்கும் விபிஜி ஆர்ஏஎம்T (VBGRAMG) குறித்து எதிர்க்கட்சி அதிமுகவின் நிலைப்பாடு என்ன? மூன்று வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்தச் சட்டம் போல இதிலும் அமித் ஷாவுக்கு ஆமாம் சாமி போட்டு ஆதரவு தரப்போகிறாரா திருவாளர் பழனிசாமி?

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதம் (MGNRE-GA) திட்டத்தில் உள்ள காந்தியடிகளின் பெயரை அகற்றிவிட்டு, சொன்னால் வாய் சுளுக்கிக் கொள்ளும்படி இந்தியில் பெயரிட்டிருக்கிறார்கள். இந்தித் திணிப்பை எதிர்த்து வென்ற பேரறிஞர் அண்ணாவின் பெயரைக் கட்சியின் பெயரில் வைத்துக்கொண்டு, இதை எதிர்க்கக் கூடவா தயக்கம்?

திட்டத்துக்கான நிபந்தனைகள் எல்லாம் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் நிதிக்கு மட்டும் மாநில அரசு பங்களிக்க வேண்டும் என்பதை அதிமுக எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக்கொள்கிறதா? உங்கள் தலைவி ஜெயலலிதா இதற்கு ஒப்புக்கொண்டிருப்பாரா?

வறுமையை ஒழித்த சாதனைக்குத் தண்டனையாக தமிழ்நாட்டில் நூறு நாள் வேலைத்திட்டமே நின்றுபோகும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளோம். இதற்கு, எப்படி முட்டு கொடுக்கப் போகிறார் எதிர்க்கட்சித் தலைவர்? இவ்வளவு குனிந்து கும்பிடும் போடும் உங்களது கட்சிக்கு, "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயர் எதற்கு? நான் கேட்கவில்லை; தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தீபத்தூணில் தீபம் ஏற்றாத விவகாரம்: நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தலைமைச்செயலர், ஏடிஜிபி ஆஜர்



முருகானந்தம் | டேவிட்சன் தேவாசீர்வாதம் | இனிகோ திவ்யன்

மதுரை, டிச.18-

திருப்பரங்குன்றம் மலை தீபத் தூணில் தீபம் ஏற்றாத விவகாரத்தில், தலைமைச்செயலாளர், சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி ஆகியோர், நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்காக காணொளி மூலம் ஐகோர்ட் மதுரை கிளையில் ஆஜரானார்கள். அறிக்கை தாக்கல் செய்ய தலைமைச்செயலர் அவகாசம் கோரிய நிலையில், வழக்கை ஜனவரி 9ம் தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

மதுரை மாவட்டம் எழுமலை ராம ரவிக்குமார் தாக்கல் செய்த மனுவை, விசாரித்த தனி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'திருப்பரங்குன்றம் மலையில் வழக்கமான இடங்களை தவிர, தீபத்தூணிலும் டிச., 3ல் கார்த்திகை தீபத்தை சுப்பிரமணியசுவாமி கோவில் நிர்வாகம் ஏற்ற வேண்டும்.'இந்த ஆண்டு முதல் தீபத்தூணிலும் கார்த்திகை தீபம் ஏற்றப்படுவதை உறுதி செய்வது போலீசாரின் கடமை' என, உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால், 'கலெக்டர் பிரவீன்குமார், போலீஸ் கமிஷனர் லோகநாதன், கோவில் செயல் அலுவலர் யக்ஞ நாராயணன் மீது நீதிமன்ற அவமதிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்' என, ராம ரவிக்குமார் மனு தாக்கல் செய்தார்.இதை அவசர வழக்காக டிசம்பர், 3ல் விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'உச்சிப் பிள்ளையார் கோவிலில் மாலை, 6:00 மணிக்கு தீபம் ஏற்றப்பட்டது. தீபத்தூணில் தீபம் ஏற்றவில்லை. பிற மனுதாரர்கள் உட்பட, 10 பேரை மனுதாரர் அழைத்துச் செல்லலாம். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சி.ஐ.எஸ்.எப்., வீரர்களை அனுப்ப உயர்நீதிமன்ற சி.ஐ.எஸ். எப்., கமாண்டன்டிற்கு உத்தரவிடுகிறேன்' என்றார்.

இதை எதிர்த்து அரசு தரப்பில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு டிசம்பர், 4ல் தள்ளுபடி செய்தது. இதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை டிச., 4ல் விசாரித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், ''கார்த்திகை தீபத்தை தீபத்தூணில் ஏற்ற வேண்டும். போலீசார் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதை நிறைவேற்றியது குறித்து அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்'' என்றார்.

இந்த அவமதிப்பு வழக்கை கடந்த 9 ம் தேதி மீண்டும் விசாரித்த நீதிபதி சுவாமிநாதன் 'தலைமை செயலர், சட்டம் ஒழுங்கு ஏ.டி.ஜி.பி., ஆகியோர் ஆஜராகும்படி உத்தரவிட்டு இருந்தார்.

இதன்படி தலைமைச் செயலாளர் முருகானந்தம், ஏடிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம் ஆகியோர் வீடியோ கான்பரன்சிங் முறையில் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் முன் ஆஜராகினர். மதுரை போலீஸ் துணை கமிஷனர் இனிகோ திவ்யன் நேரில் ஆஜரானார். அறிக்கை தாக்கல் செய்ய தலைமைச்செயலர் அவகாசம் கோரினார். தொடர்ந்து வழக்கை அடுத்தாண்டு ஜனவரி 9ம் தேதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

## SIR - வேலூர் மாவட்ட 5 பேரவை தொகுதிகளில் 2.15 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்?



வேலூர், டிச.18-

வேலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (எஸ்.ஐ.ஆர்) முடிவுற்ற நிலையில் நாளை மறுதினம் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. தற்போதுள்ள பட்டியலில் உள்ள 13.03 லட்சம் வாக்காளர்களில் சுமார் 2.15 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் (எஸ்.ஐ.ஆர்) கடந்த நவ. 4ம் தேதி தொடங்கியது. இந்த பணிகள் டிச. 4ம் தேதியுடன் முடிவுடையும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் முதலில் டிச. 11ம் தேதி என்றும், பிறகு டிச. 14ம் தேதி வரையும் நீட்டிக்கப்பட்டது. தற்போது, எஸ்.ஐ.ஆர் பணிகள் நிறைவு பெற்ற நிலையில் டிச.19ம் தேதி (நாளை மறுதினம்) வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான எஸ்.ஐ.ஆர் பணிகள் முடிவுற்றுள்ளன. அக்.27ம் தேதி அன்றைய நிலவரப்படி மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவை தொகுதிகளில் மொத்தம் 13 லட்சத்து 3 ஆயிரத்து 30 வாக்காளர்கள் இருந்தனர். 1,314 வாக்குச்சாவடி அலுவலர்கள் மூலம் வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று எஸ்.ஐ.ஆர் படிவங்கள் வழங்கப்பட்டன.

மேலும், பூர்த்தி செய்த படிவங்களை திரும்பப்பெறும் பணியும் நடைபெற்றன. இவற்றை வாக்குச்சாவடி அலுவலர்களின் கைபேசி செயலி வழியாக பதிவேற்றம் செய்யும் பணி இரவு, பகலாக நடைபெற்றன. வாக்காளர்களால் பூர்த்தி செய்து திரும்ப அளிக்கப்பட்ட எஸ்.ஐ.ஆர் படிவங்கள் மட்டும் வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உயிரிழந்த வாக்காளர்கள் மற்றும் நிரந்தரமாக இடம் பெயர்ந்தவர்களின் படிவங்கள் குறித்து மீண்டும் வீடு, வீடாகச் சென்று வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களால் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டன. உரிய விசாரணைக்குப் பிறகே வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கவும் நடவடிக்கை எடுத்தனர்.

வேலூர் மாவட்டத்தில் நடந்து முடிந்துள்ள எஸ்.ஐ.ஆர் திருத்த பணியில் சுமார் 10 லட்சத்து 88 ஆயிரம் படிவங்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் சுமார் 3.44 லட்சம் வாக்காளர் பதிவாகியுள்ளனர். இவர்களின் உறவினர்கள் என்ற அடிப்படையில் சுமார் 7.22 லட்சம் வாக்காளர்களாக இடம் பெற்றுள்ளனர்.

எஸ்.ஐ.ஆர் ஆய்வில் உயிரிழந்தவர்கள் 48 ஆயிரம் பேரும், நிரந்தரமாக வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தவர்கள் சுமார் 72 ஆயிரம் பேரும், இரட்டை பதிவு கொண்ட வாக்காளர்கள் 10 ஆயிரம் பேரும், முகவரியில் இல்லாத வாக்காளர்கள் சுமார் 84 ஆயிரம் பேர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் இருந்து ஏறக்குறைய 2.15 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில், குடியாத்தம் தனி தொகுதியில் சுமார் 58 ஆயிரம் பேரும், வேலூர் தொகுதியில் சுமார் 54 ஆயிரம் பேரும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட உள்ளதாக தெரிகிறது.

மேலும், காட்பாடி தொகுதியில் சுமார் 35 ஆயிரம் பேர், அணைக்கட்டு தொகுதியில் சுமார் 36 ஆயிரம் பேர், கே.வி.குப்பம் (தனி) தொகுதியில் சுமார் 29 ஆயிரம் வாக்காளர்கள் நீக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல், மாவட்டத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள 10.88 லட்சம் வாக்காளர்களில் 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் உறவினர் தொடர்பு இல்லாத சுமார் 19 ஆயிரம் வாக்காளர்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களுக்கு டிச.19ம் தேதிக்கு பிறகு நோட்டீஸ் வழங்கப்பட உள்ளது.

நோட்டீஸ் பெற்ற வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள 11 ஆவணங்களில் ஏதாவது ஒன்றை சமர்ப்பித்து உறுதி செய்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆவணங்களை சமர்ப்பிக்காத வாக்காளர்களின் பெயர்கள் இறுதி வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடந்த 15 ஆம் தேதி சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கிலிருந்து காணொலிகாட்சி வாயிலாக நகர்புற உள்ளாட்சிகளுக்கான டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரங்கள் வழங்கும் நிகழ்சியை தொடங்கி வைத்ததை தொடர்ந்து. தமிழ் வளரச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சி, விஷ்வாஷ் மஹாலில் டாக்டர். கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி வார்டுகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட விளையாட்டு அலுவலர் ரகுகுமார் ஆகியோர் உள்ளனர்.



# யோகாவை உலகளவில் கொண்டு சேர்த்த பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து ஒரு லட்சம் தபால் அட்டைகளை அனுப்பிய யோகா மாணவர்கள்

## புதிய உலக சாதனையாக குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸ் புதிய சாதனையாக அங்கரித்தது

சென்னை, டிச.18-

சென்னை அண்ணா நகரில் உள்ள குளோபல் யோகா அகடாமி சார்பில் டிசம்பர் 11ம் தேதி உலக யோகா தினம் அறிவித்து உலளவில் யோகாவை கொண்டாடுவற்கு காரணமாக உள்ள பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்தும், நன்றியும் தெரிவிக்கும் வகையில் யோகா கற்றுவரும் மாணவர்கள் ஒரு லட்சம் தபால் தலைகள் அனுப்பும் நிகழ்ச்சி நடைப்பெற்றது.

அதன்படி கடந்த டிசம்பர் 10ம் தேதி முதல் ஒரு வாரம் காலமாக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து தபால் அனுப்பி வருகின்றனர். இந்தியா முழுவதும் உள்ள 15 ஆயிரம் யோகா பள்ளிகளை சேர்ந்த சுமார் ஒரு லட்சம் மாணவர்கள் பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து தொடர்ச்சியாக கடிதம் எழுதி அனுப்பி உள்ளனர்

இந்த நிலையில் யோகா மாணவர்கள், பயிற்சியாளார்கள், மாணவர்களின் பெற்றோர் என ஒரு லட்சம் தபால் கடிதங்களை பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து அஞ்சலகம் மூலம் அனுப்பியதை குளோபல் புக் ஆப் யோகா ரெக்கார்ட்ஸ் புதிய உலக சாதனையாக அங்கரித்தது.

இதனையடுத்து குளோபல் யோகா பள்ளி நிறுவனர் கணேஷுக்கு உலகசாதனைகான சான்றிதழ்களை வழங்கி கவுரவித்தனர்.



# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான தடகளப் போட்டி

சிவகங்கை, டிச.18-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையேயான தடகளப் போட்டி இராமநாதபுரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளில் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி விளையாட்டு வீரர்களான ஸ்ரீ நிரஞ்சன் தடை தாண்டுதல் 110 மீட்டர், 400 மீட்டர் போட்டிகளில் முதல் பரிசு, ஸ்ரீநிதி 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு, யோகேஸ்வரன் உயரம் தாண்டுதலில் முதல் பரிசு, ஹரிஷ் குமார் தட்டு எறுதலில் இரண்டாம் பரிசு, லோகேஷ் ஈட்டி எறிதலில் இரண்டாம் பரிசு, அட்சயா 100 மீட்டர் தடை தாண்டுதல் போட்டியில் முதல் பரிசு மற்றும் உயரம் தாண்டுதல் போட்டியில் மூன்றாம் பரிசு, ராமச்சந்திரன் 5000 மீட்டர், 10000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் மூன்றாம் பரிசு, 4ஜ் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார்கள், அகில இந்திய பல்கலைக்கழகத்திற்கு இடையேயான போட்டிகளில் பங்கேற்பதற்கு ஸ்ரீ நிரஞ்சன், ஸ்ரீநிதி, யோகேஸ்வரன் ஆகியோர்கள் தடகளப் போட்டியில் விளையாடுவதற்கு அழகப்பா பல்கலைக் கழகத்தால் தேர்வு செய்துள்ளார்கள். இவர்களை கல்லூரி நிர்வாகத்தினர்கள், கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் நாவுக்கரசு, உடற்கல்வி இயக்குநர் முனைவர் லூர்துராஜ் மற்றும் இருபால் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# CM வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த இளைஞர் கைது




கன்னியாகுமரி, டிச.18-

கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டி அருகே உச்சம்பாறை பகுதியை சேர்ந்தவர் இசக்கிமுத்து (32). இவர் தனது செல்போன் மூலம் நேற்று டிஜிபி அலுவலகத்தை தொடர்பு கொண்டு முதலமைச்சர் வீட்டிற்கு வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக மிரட்டியுள்ளார்,அதனை தொடர்ந்து பூதப்பாண்டி போலீசார் விசாரணை மேற்கொண்டு அச்சுறுத்திய இசக்கிமுத்துவை கைது செய்தனர். மேலும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம்



திருப்பூர், டிச.18-

திருப்பூர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் கடந்த 16 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் சார்பில் மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்தில் குழந்தைகள் சார்ந்து மேற்கொள்ளப்படும் நலன் சார்ந்த திட்டங்கள், POCSO வழக்குகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகள், குழந்தை திருமணங்கள் செய்யப்பட்ட குழந்தைகள், குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் விவாதிக் கப்பட்டது.

மேலும், குழந்தைகளின் பிரச்ச னைகளை உடனடியாகக் கண்டறிய ஏதுவாக அனைத்து நிலைகளிலும் கிராம அளவில், வட்டார அளவில், பேரூராட்சி அளவில், நகராட்சி அளவில், மாநகராட்சி மண்டல அளவில், வார்டு அளவில் என அனைத்து நிலைகளிலும் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டங்கள் முறையாக மூன்று மாதத்திற்கொருமுறை நடத்திடவும், குழந்தைகள் சார்ந்த பிரச்சனைகள் குறித்து தீர்மானம் மேற்கொண்டு, அதை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து பதியப்படும் வழக்குகளின் விபரங்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுக்கு உடனடியாக வழங்க வேண்டும். இதனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான உரிய மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிக் கப்பட்ட குழந்தைகளுக்கான இழப்பீடு நிதி பெற்ற வழங்க உறுதுணையாக அமையும்,

இக்கூட்டத்தில் ஆதரவற்ற குழந்தைகளின் வாழ்வாதாரம், நலவாழ்விற்கு சிறந்ததொரு வகையில் மாதாந்திர நிதி வழங்கும் விதமாக அன்புக்கரங்கள் திட்டத்தின் கீழ் பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து விட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் குழந்தையை கைவிட்டு சென்ற குழந்தைகள். (கைவிடப்பட்ட குழந்தை), பெறோரில் ஒருவர் இறந்துவிட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து விட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் சிறையிலுள்ள குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து விட்டார் மற்றும் பிறிதொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வரும் குழந்தைகளுக்கு மாதம் ரூ.2000/ வழங்கப்பட்டு வருவது தொடர்பாகவும், பெற்றோர்கள் இல்லாத குழந்தைகள் இருப்பின் அவர்களை கண்டறிந்து அன்புக்கரங்கள் திட்டத்தில் இணைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.என். ரியாஸ் அகமது பாஷா, தன்னார்வ தொண்டு நிறுவனப்பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.



# பொது இடங்களில் உரிய அனுமதியின்றி வைக்கப்பட்ட பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள், கொடிக்கம்பங்கள் அகற்றம்

சிவகங்கை, டிச.18-

சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் W.P.(MD) No. 27717/2022 உத்தரவில் பொது இடங்களில் உரிய அனுமதியின்றி அரசியல் கட்சிகள், ஜாதி மற்றும் சமுதாய அமைப்புகளால் வைக்கப்பட்டுள்ள பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள், கொடிக்கம்பங்கள் முதலியவற்றை நீக்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த உயர்நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும் பொருட்டு முதற்கட்டமாக வருவாய்த் துறையினரால் காவல்துறையினரின் பாதுகாப்புடனும் பொதுமக்கள் ஒத்துழைப்புடனும் சிவகங்கை மாவட்டம் சாலைகிராமம் மற்றும் இளையான்குடி சுற்றுவட்டார பகுதிகளில் உரிய அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த 35 போர்டுகள், 12 கொடிக்கம்பங்கள், 05 சிமெண்டாலான பீடங்கள் ஆகியவை அகற்றப்பட்டுள்ளது. மேலும், மாவட்டம் முழுவதும் உரிய அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள், கொடிக்கம்பங்களை அகற்றும் பணி தொடர்ந்து நடைபெறும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் வருங்காலங்களில், உயர்நீதிமன்ற உத்தரவை மீறி உரிய அனுமதியின்றி பொது இடங்களில் பிளக்ஸ் பேனர்கள், போர்டுகள், கொடிக்கம்பங்கள் நிறுவுபவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சிவகங்கை மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.






# பழனி மாவட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு ஐந்தாம் ஆண்டு பொதுக்குழுவிழா

திண்டுக்கல், டிச.18-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் மிகவும் பிரமாண்டமாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பழனி மாவட்ட ஐந்தாம் ஆண்டு பொதுக்குழு விழா பழனி மாவட்டத் தலைவர் ஜே பி சரவணன் கிருபாகரன் ஹரிஹர முத்து பாஸ்கர் ஆகிய தலைமையில் சிறப்பு அழைப்பாளராக மாநில தலைவர் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் துணைத் தலைவர் விக்ரம் ராஜா கலந்து கொண்டார் விழாவில் சங்கத்தின் வளர்ச்சி மற்றும் எதிர்கால திட்டங்களைப் பற்றி விவாதிப்பது, உறுப்பினர்களுக்குள் ஒற்றுமையை வலுப்படுத்துவது.தலைவர், செயலாளர், பொருளாளர் போன்றோர் முன்னிலையில் வரவேற்பு, சிறப்புரைகள், கொடியேற்றுதல், மற்றும் வணிகர்கள் சந்திப்பு போன்றவை நடைபெற்றது மற்றும்.பழனி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பிற்காக எப்பொழுதும் உறுதுணையாக இருப்பேன் என சிறப்புரை ஆற்றினார். மற்றும் பழனி மாவட்ட அனைத்து வணிக சங்க பேரமைப்பு கிளை சங்கங்கள் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மதியம் விருந்து உபசரிப்பு நடைபெற்றது

## நந்திவரம் கூடுவாஞ்சேரியில் கலைஞர் நகர உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ்

# நூலகம், அறிவு சார் மையம், மற்றும் அரசு நடுநிலைப்பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடம் திறப்பு விழா

## அமைச்சர் தா.மோ. அன்பரசன், மாவட்ட ஆட்சியர் தி.சினேகா திறந்து வைத்தார்கள்

செங்கல்பட்டு, டிச.18-

செங்கல்பட்டு மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரியில் கலைஞர் நகர உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவு சார் மையம் கட்டிடம் திறப்பு விழா நகர மன்ற தலைவர் எம்கேடி.கார்த்திக் தண்டபாணி தலைமையில் நடைபெற்றது. இதில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகர மன்ற துணைத் தலைவர் வழக்கறிஞர் ஜி.கே. லோகநாதன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜிஜேந்திரன் ராமு, நகராட்சி ஆணையர் சந்தானம், மறைமலைநகர் நகர மன்ற தலைவர் ஜெ.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர மன்ற உறுப்பினர் ஜெயந்தி ஜெகன் அனைவரும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, ஆகியோர் கலந்து கொண்டு நூலகம் மற்றும் அறிவு சார் மையம் கட்டிடத்தினை ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்று திறந்து வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து அரசு நடுநிலைப் பள்ளியில் மாநில நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 70. லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ஆகியோர் ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்து பள்ளி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அமைச்சரிடம் வாழ்த்து பெற்ற மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணைய உறுப்பினர்



சிவகங்கை, டிச.18-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்தவர் புஷ்பராஜ் என்பவர், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் ஆணைய உறுப்பினராக செயல்பட்டு வருகிறார்.

மேலும் தமிழ்நாடு அரசு மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் சட்டமன்ற ஆணையின்படி மாற்றத்திறனாளிகளுக்கு உள்ளாட்சியில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது...

அதனடிப்படையில் கடந்த மாதம் மானாமதுரை நகராட்சியில் நகர்மன்ற நியமன உறுப்பினராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சியில் பிரதிநிதித்துவம் வழங்கியமைக்காக ஏற்கனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் ஆகியோரிடம் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து வாழ்த்துகளைப் பெற்று வந்தார். இந்நிலையில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை அமைச்சர் பெ. கீதா ஜீவன் அவர்களை நேரில் சந்தித்து நன்றி கூறி பின் வாழ்த்து பெற்றார்.

## காட்பாடி முன்னாள் அதிமுக நகர மன்ற உறுப்பினர் ரிஷிகுமார் பிறந்தநாள் விழா

# சமூக ஆர்வலரும், தென்னிந்திய பத்திரிகையாளர்கள் சங்க (ஒ.மா.த) தலைவரும், செய்தி ஆசிரியருமான டாக்டர். ராஜ்பாபு புத்தகம் வழங்கி வாழ்த்து அறிவிப்பு



காட்பாடி, டிச.18-

வேலூர் மாவட்டம், காட்பாடி காந்திநகரைச் சேர்ந்த அதிமுக முன்னாள் நகர மன்ற உறுப்பினரும், தொழிலதிபருமான ரிஷிகுமாரின் பிறந்தநாள் விழா, வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் கோலாகலமாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் சமூக ஆர்வலரும் தென்னிந்திய பத்திரிகையாளர்கள் சங்கத்தின் ஒருங்கிணைந்த மாவட்டத் தலைவரும், செய்தி ஆசிரியருமான டாக்டர். ராஜ்பாபு கலந்து கொண்டு, ரிஷிகுமாருக்கு பொன்னாடை போர்த்தி புத்தகம் வழங்கி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அரசியல் பிரமுகர்கள், நண்பர்கள், அரசு பணியாளர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, அவருக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# அனுமன் ஜெயந்தி 2025...இதை செய்தால் வெற்றி மேல் வெற்றி தேடி வரும்



மார்கழி மாதத்தில் வரும் மிக முக்கியமான விரத மற்றும் வழிபாட்டு நாட்களில் அனுமன் ஜெயந்தியும் ஒன்று. மார்கழி அமாவாசை அன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து வழிபடுவதுடன், அனுமனையும் மனதார வழிபடலாம். இந்த ஆண்டு அனுமன் ஜெயந்தி எப்போது வருகிறது, இந்த நாளில் அனுமனை எப்படி வழிபட்டால் அதிக அளவிலான பலன்களை பெறலாம் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

ராம பக்தரான அனுமன் அவதரித்த தினத்தையே அனுமன் ஜெயந்தியாக கொண்டாடுகிறோம். தமிழ் புராணங்களின் படி, அனுமன் மார்கழி மாத அமாவாசையும், மூலம் நட்சத்திரமும் இணைந்த நாளில் அவதரித்ததாக சொல்லப்படுகிறது. இதனால் வழக்கமான அமாவாசைகளை விட மார்கழி மாதத்தில் வரும் அமாவாசை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த நாளில் விரதம் இருந்து முன்னோர்களை வழிபடுவதுடன், அனுமனையும் வழிபட்டால் அமைதி, செல்வ வளம், உடல் வலிமை, தைரியம் ஆகியவை கிடைக்கும். தென் மாநிலங்களில் மட்டுமே அனுமன் ஜெயந்தி மார்கழி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. ஆனால் வட மாநிலங்களில் சித்திரை மாதத்திலேயே கொண்டாடுவதை வழக்கமாக வைத்துள்ளார்கள்.

தமிழ் பஞ்சாங்கப்படி, இந்த ஆண்டு டிசம்பர் 19ம் தேதி வெள்ளிக்கிழமை அனுமன் ஜெயந்தி கொண்டாடப்பட உள்ளது. அன்றைய தினம் காலை 05.57 மணிக்கு துவங்கி, டிசம்பர் 20 ம் தேதி காலை 07.54 வரை அமாவாசை திதி உள்ளது. ஆனால் டிசம்பர் 20ம் தேதி அதிகாலை 12.05 மணிக்கு தான் மூலம் நட்சத்திரம் துவங்குகிறது. இதனால் திதியை அடிப்படையாக கொண்டு அனுமன் ஜெயந்தியை கொண்டாடுபவர்கள் டிசம்பர் 19ம் தேதியன்றும், நட்சத்திரத்தை அடிப்படையாக வைத்து கொண்டாடுபவர்கள் டிசம்பர் 20ம் தேதி அன்றும் அனுமன் ஜெயந்தியை கொண்டாடலாம். ஆனால் டிசம்பர் 20ம் தேதி காலை 07.54 மணி வரை மட்டுமே அமாவாசை திதி உள்ளதால், அதற்கு முன்பாக அனுமன் ஜெயந்தி வழிபாடுகளை செய்வது சிறப்பு.

அனுமன் ஜெயந்தி அன்று அனுமனை வழிபடுவதால் ஞானம், தீய சக்திகளிடம் இருந்து பாதுகாப்பும் கிடைக்கும். குறிப்பாக சனி மற்றும் ராகுவால் ஏற்படும் தீய பலன்கள் குறையும். இந்த நாளில் அனுமனுக்கு செந்தூரம் சாற்றி, அனுமன் மந்திரங்களை சொல்லி வழிபடுவதால் வாழ்க்கையில் இருக்கும் துன்பங்களில் இருந்து விடுபட்டு, மகிழ்ச்சி மற்றும் தொடர் வெற்றிகளை பெற முடியும். இந்த நாளில் ஸ்ரீராம ஜெயம் சொல்லுவதும், எழுதுவதும் சிறப்பான பலன்களை தரும். இந்த நாளில் எத்தனை முறை முடியுமோ அத்தனை முறை ஸ்ரீராம ஜெயம் சொல்லலாம். இது அனுமனின் அருளை விரைவாக பெற்றுத் தரும். முடிந்தவர்கள் ஸ்ரீராம ஜெயம் எழுதி, அனுமனுக்கு மாலை கட்டி போடலாம்.

அனுமன் ஜெயந்தி அன்று அனுமனுக்கு துளசி மாலை, வடை மாலை, வெண்ணெய் காப்பு ஆகியவற்றை சாத்தி வழிபடலாம். அனுமனுக்கு வெண்ணெய் சாற்றி வழிபட்டால் அந்த வெண்ணெய் உருகுவதற்குள் அனுமன் நம்முடைய துன்பங்களை போக்கி, வேண்டுதல்களை நிறைவேற்றி வைப்பார் என்பது நம்பிக்கை. அதே போல் இந்த நாளில் அனுமனுக்கு வெற்றிலை மாலை சாற்றி வழிபட்டால் உங்களுக்கு வெற்றி மேல் வெற்றி வந்து கொண்டே இருக்கும். அருகில் இருக்கும் அனுமன் கோவிலுக்கு சென்று இந்த நாளில் வழிபாடு செய்ய மறந்து விடாதீர்கள். இந்த நாளில் அனுமனுக்கு நடைபெறும் சிறப்பு அபிஷேகங்களையும் தரிசனம் செய்வது சிறப்பு.

# மார்கழி அமாவாசை 2025...அதிர்ஷ்டம் பெருக இந்த 5 பொருட்களை தானம் செய்ய மறக்காதீங்க



மார்கழி மாதம் பாவங்களை போக்கி பல விதமான துன்பங்களில் இருந்து விடுபடுவதற்கும், முக்தியை பெறுவதற்குமான மாதமாகும். இந்த மாதத்தில் வரும் அமாவாசை மிக மிக சிறப்புக்குரியதாகும். இந்த நாளில் சில முக்கியமான பொருட்களை தானம் செய்வதால் நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் துன்பங்கள், தடைகள் நீங்குவதுடன் அதிர்ஷ்டம் பெருகிக் கொண்டே இருக்கும்.

மார்கழி மாதத்தில் வரும் அமாவாசை மிகவும் சிறப்புக்குரியதாக கருதப்படுகிறது. இது பித்ருபட்சத்திற்கு இணையான அமாவாசை என சாஸ்திரங்களில் குறிப்பிடப்படுகிறது. அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த மார்கழி அமாவாசை, 2025ம் ஆண்டில் டிசம்பர் 19ம் தேதியன்று வருகிறது. முன்னோர் வழிபாட்டிற்கான இந்த நாளில் தர்ப்பணம், சிரார்த்தம், பிண்ட தானம் செய்து முன்னோர்களின் ஆத்மாக்களை சாந்தி அடைய செய்வதுடன், முன்னோர்களின் ஆசிகளையும், அதிர்ஷ்டத்தையும் பெறுவதற்கு 5 முக்கியமான பொருட்களை தானம் செய்வது சிறப்பு.

மார்கழி அமாவாசையில் தானம் செய்ய வேண்டிய 5 பொருட்கள் :

1. போர்வை மார்கழி மாதம் குளிரான மாதம் என்பதால் அந்த குளிரில் இருந்து உடலை பாதுகாக்கும் வகையிலான போர்வை, கம்பளி போன்றவற்றை சாலையோரம் வசிப்பவர்களுக்கும், ஏழைகளுக்கும் தானமாக அளிப்பதால் பெருமாளின் அருள் கிடைக்கும். துன்பத்தில் இருந்து ஒருவரத காப்பது என்பது தெய்வத்திற்கு செய்யும் நேரடி தொண்டு ஆகும். இதனால் நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் அனைத்து விதமான துன்பங்களில் இருந்து விடுபட முடியும். மனதிற்கும் இது அமைதியை தரும்.

2. கருப்பு எள், வெல்லம் மார்கழி மாதம் முன்னோர்கள் முக்தி அடைவதற்கு மட்டுமின்றி சூரிய பகவானின் அருளையும் பெறுவதற்குரிய மாதமாகும். இந்த நாளில் கருப்பு எள் மற்றும் வெல்லம் ஆகியவற்றை தானம் செய்வது மிகவும் உயர்வான தானமாக கருதப்படுகிறது. கருப்பு எள்ளை தானமாக அளிப்பதால் சனியால் ஏற்படும் உடல் உபாதைகளில் இருந்து விடுபட முடியும். அதோடு முன்னோர்களின் ஆசிகளும் கிடைக்கும். அதே போல் வெல்லத்தை தானம் அளிப்பதால் ஜாதகத்தில் சூரியனின் நிலையை பலப்படுத்த முடியும். இதனால் மதிப்பு, மரியாதை உயரும். கௌரவ பதவிகள் கிடைக்கும்.

3. நெய் அமாவாசை அன்று நெய் தானம் செய்வது அதிர்ஷ்டத்தை தரும். அதே போல் மார்கழி மாதத்தில் நெய் கலந்த உணவுகள் அல்லது அன்னதானம் செய்வதும் நல்லது. இது சந்திரன் மற்றும் சனி பகவானுக்குரிய பொருட்களாகும். இவற்றை தானமாக அளிப்பதால் மனதில் தெளிவு, துன்பங்களில் இருந்து விடுதலை ஆகியவை கிடைக்கும். மன அமைதி கிடைக்கும். குழப்பமான விஷயங்களில் தெளிவான முடிவுகள் கிடைக்கும்.

4. வெள்ளி, தண்ணீர் தண்ணீர் தானம் மிக சிறந்த தானங்களில் ஒன்றாகும். தண்ணீர் பந்தல் அமைத்து கொடுப்பது, தண்ணீர் குழாய் அமைத்துக் கொடுப்பது போன்றவற்றை செய்வதால் முன்னோர்கள் மனம் மகிழ்வார்கள். அதோடு சிறிய அளவிலாவது வெள்ளியை வாங்கி தானமாக அளிப்பதும் நல்லது. வசதி உள்ளவர்கள் வெள்ளி தானம் அளிக்கலாம். வெள்ளி, சுக்கிரன் மற்றும் சந்திரனுக்குரிய உலோகம் ஆகும். சந்திரனை மனோகாரகன் என்பார்கள். அதனால் அவருக்குரிய உலோகத்தை தானமாக அளிக்கும் போது மனஅழுத்தல் நீங்கும். தெளிவான, நல்ல முடிவு எடுக்கும் திறன் அதிகரிக்கும்.

5. நவ தானியங்கள் மார்கழி அமாவாசை அன்று நவதானியங்களை தானமாக அளிப்பது மிகவும் நல்லது. ஒன்பது வகையான தானியங்களை தானம் செய்ய முடியாவிட்டாலும் அரிசி, கோதுமை போன்ற ஏதாவது ஏழு வகையான தானியங்களை தானம் செய்யலாம். இதை சப்ததான்ய தானம் என்பார்கள். இதை செய்வதால் எந்த காலத்தில் உங்கள் வீட்டில் உணவுக்கோ, செல்வத்திற்கோ கொஞ்சமும் குறைவு ஏற்படாது. வேலையில் தொடர்ந்து தடைகள், தொழிலில் நஷ்டம் ஆகியவற்றை சந்திப்பவர்கள் அமாவாசை அன்று தானியங்களை தானம் செய்வதால் சிறப்பான வாழ்க்கை அமையும். புதிய வாய்ப்புகள், வளர்ச்சி தேடி வரும்.

# கான்வே முதல் பேர்ஸ்டோ வரை: ஐபிஎல் மினி ஏலத்தில் போனி ஆகாத வீரர்கள்








எதிர்வரும் 2026ம் ஆண்டு ஐபிஎல் சீசனுக்கான மினி ஏலத்தில் மொத்தம் 359 வீரர்கள் இடம்பெற்றனர். இதில் 77 வீரர்கள் மட்டுமே எடுக்கப்பட வேண்டி இருந்தது. அதன்படி 10 ஐபிஎல் அணிகளும் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப வீரர்களை ஏலத்தில் வாங்கின.

இந்நிலையில், ஏலத்தில் பங்கேற்ற சர்வதேச கிரிக்கெட் நட்சத்திரங்கள் மற்றும் ஐபிஎல் கிரிக்கெட்டில் இதற்கு முன்பு ஆடிய முக்கிய வீரர்களை 10 அணிகளும் வாங்கவில்லை. இதில் சிஎஸ்கே முன்னாள் வீரர் டெவான் கான்வே, ஹைதராபாத், பஞ்சாப், மும்பை உள்ளிட்ட அணிகளில் விளையாடிய ஜானி பேர்ஸ்டோ உள்ளிட்டோரை எந்த அணியும் வாங்கவில்லை.

ஏலத்தில் போனியாகாத வீரர்கள்:

ஜேக் ஃப்ரேசர் மெக்குர்க் , டெவான் கான்வே, அதர்வா டைடெ, அன்மோல்பிரீத் சிங், அபினவ் மனோகர், யஷ் துல், செதிக்குல்லா அடல், ஜெரால்டு கோட்ஸி, ஸ்பென்சர் ஜான்சன், ஃபசல்ஹக் ஃபரூக்கி, தீக்ஷனா, முஜீப் உர் ரஹ்மான், சிமர்ஜித் சிங், ஆகாஷ் மத்வால், கரண் சர்மா, கே.எம்.ஆசிப், முருகன் அஸ்வின், ரிச்சர்ட் கிளீசன், ரைலி மெரிடித், ரிச்சர்ட்சன், வியான் முல்டர், விஜய் ஷங்கர், மஹிபால் லோம்ரோர், மைக்கேல் பிரேஸ்வெல், டேரில் மிட்செல், ஷனகா, சித்தார்த் யாதவ், வில்லியம் சுதர்லாந்து, ரஹ்மானுல்லா குர்பாஸ், ஜேமி ஸ்மித், ஜானி பேர்ஸ்டோ, வன்ஷ் பேடி, ஜேமி ஸ்மித்.

காயம் உள்ளிட்ட காரணத்தால் தற்போது ஒப்பந்தம் ஆகியுள்ள வீரர்களை விலகினால், இவர்களை மாற்று வீரர்களாக அணிகள் பயன்படுத்தக்கூடும். கடந்த சீசனில் பேர்ஸ்டோ மும்பை இந்தியன்ஸ் அணியில் அப்படி ஒப்பந்தம் ஆகியிருந்தார்.

# மில்லர் முதல் சர்பராஸ் வரை: ஐபிஎல் மினி ஏலத்தில் அடிப்படை தொகைக்கு வாங்கப்பட்ட வீரர்கள்

ஐபிஎல் 2026ம் ஆண்டு சீசனுக்கான மினி ஏலம் அபுதாபியில் நடைபெற்றது. இதில் 77 வீரர்களை 10 ஐபிஎல் அணிகளும் வாங்கி இருந்தன. இதில் சில வீரர்களை அடிப்படை தொகைக்கே அணிகள் வாங்கின.

இந்தப் பட்டியலில் சில முக்கிய வீரர்களும் அடங்குவர். அந்த வகையில் இது ஐபிஎல் அணிகளுக்கு அடித்த ஜாக்பாட் என்றும் சொல்லலாம்.

டெல்லி கேபிடல்ஸ் அணி, கைல் ஜேமிசன், இங்கிடி, பென் டக்கெட், டேவிட் மில்லர், பிரித்வி ஷா ஆகியோரை அவர்களை அடிப்படை தொகைக்கு வாங்கியது. இவர்களில் மில்லர், இறுதி ஓவர்களில் அதிரடியாக ஆடி எதிரணியை அச்சுறுத்தும் திறன் படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குஜராத் டைட்டன்ஸ் அணி, டாம் பேன்டன், லூக் வுட், பிரித்விராஜ் யர்ராவை அடிப்படை தொகைக்கு வாங்கி இருந்தது. கொல்கத்தா அணியில் ஃபின் ஆலன், டிம் செய்ஃபெர்ட், ஆகாஷ் தீப், ராகுல் திரிபாதி, பிரஷாந்த் சோலங்கி, கார்த்திக் தியாகி ஆகியோர் அடிப்படை தொகைக்கு ஒப்பந்தம் செய்தது.

லக்னோவில் நோர்க்யா, வனிந்து ஹசரங்கா அடிப்படை தொகைக்கு வாங்கப்பட்டனர். மும்பை அணி இந்த ஏலத்தில் டிகாக், மயங்க் ராவத், அதர்வா அன்கோல்கர், முகமது இஸார், டேனிஷ் மேல்வர் ஆகியோரை வாங்கியது. இவர்கள் ஐவரும் அடிப்படை தொகைக்கு அந்த அணி ஒப்பந்தம் செய்தது.

பஞ்சாப் கிங்ஸ் அணியில் விஷால் நிஷாத், பிரவீன் துபே, ராஜஸ்தான் ராயல்ஸ் அணியில் குல்தீப் சென், பிரிஜேஷ் சர்மா, அமன் ராவ், விக்னேஷ் புதூர், யாஷ் ராஜ் ஆகியோரும், ஆர்சிபி அணியில் ஜேக்கப் டஃபி, ஜோர்டன் காக்ஸ், கனிஷ்க் சவுகான், விஹான் மல்ஹோத்ரா, விக்கி ஒஸ்ட்வால், சாத்விகே தேஸ்வால் ஆகியரையும், ஹைதராபாத் அணி சிவம் மாவி, கிரைன்ஸ், அமித் குமார், ஷாகிப் ஹுசைன், ஷிவாங் குமார் ஆகியோர் அடிப்படை தொகைக்கு ஒப்பந்தம் செய்தது.

நியூஸிலாந்து வேகப்பந்து வீச்சாளர் மேட் ஹென்றி, மேற்கு இந்தியத் தீவுகளை சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் அகீல் ஹோசைன், ஆஸ்திரேலிய பேட்ஸ்மேன் மேத்யூ ஷார்ட், நியூஸிலாந்து ஆல்ரவுண்டர் ஸாக் பவுல்க்ஸ், இந்திய பேட்ஸ்மேன் சர்ஃபராஸ் கான் உள்ளிட்டோரை அடிப்படை தொகைக்கு சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ஏலத்தில் வாங்கியது.




# இரட்டை சதம் விளாசி அபிக்யான் குண்டு சாதனை

யு19 ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் துபாயில் நடைபெற்று வருகிறது. இதில் ‘ஏ’ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று மலேசியாவுடன் மோதியது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 408 ரன்கள் குவித்தது.

விக்கெட் கீப்பர் பேட்ஸ் மேனான அபிக்யான் குண்டு இரட்டை சதம் விளாசி சாதனை படைத்தார். அதிரடியாக விளையாடிய அபிக்யான் குண்டு 125 பந்துகளில், 9 சிக்ஸர்கள், 17 பவுண்டரிகளுடன் 209 ரன்கள் விளாசி கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன் மூலம் இளையோருக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இரட்டை சதம் விளாசிய முதல் இந்திய வீரர் என்ற சாதனையை அபிக்யான் படைத்தார். தொடக்க வீரரான வைபவ் சூர்யவன்ஷி 26 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 50 ரன்களும் வேதாந்த் திரிவேதி 106 பந்துகளில், 7 பவுண்டரிகளுடன் 90 ரன்களும் சேர்த்தனர். 409 ரன்கள் இலக்குடன் பேட் செய்த மலேசியா அணி 32.1 ஓவர்களில் 93 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

இந்திய அணி தரப்பில் மித வேகப்பந்து வீச்சாளரான தீபேஷ் தேவேந்திரன் 5 விக்கெட்களை வீழ்த்தினார். 315 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு இது ஹாட்ரிக் வெற்றியாக அமைந்தது. இதன் மூலம் லீக் சுற்றின் முடிவில் இந்திய அணி தனது பிரிவில் 6 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறியது.

2வது வீரர்: யு19 ஆசிய கோப்பை தொடரில் மலேசியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனான அபிக்யான் குண்டு 209 ரன்கள் விளாசினார். இதன் மூலம் உலக அரங்கில் யு19 மட்டத்தில் இரட்டை சதம் விளாசிய 2வது வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் அபிக்யான். இதற்கு முன்னர் ஜிம்பாப்வே வேக்கு எதிராக தென் ஆப்பிரிக்காவின் ஜோரிச் வான் ஷால்க்விக் 215 ரன்கள் விளாசியிருந்தார்.

# ராஜமவுலியின் ‘வாரணாசி’யில் பணிபுரிய ஜேம்ஸ் கேமரூன் விருப்பம்





‘வாரணாசி’ படத்தில் பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளார் ‘அவதார்’ இயக்குநர் ஜேம்ஸ் கேமரூன்.

ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ‘அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்’. இந்தியாவில் டிசம்பர் 19ம் தேதி இப்படம் வெளியாகவுள்ளது. இதற்கு பெரும் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது. இதனை விளம்பரப்படுத்த இயக்குநர் ராஜமவுலி உடன் இணையவழியாக கலந்துரையாடிய வீடியோ பதிவொன்று வெளியாகி இருக்கிறது.

‘அவதார்: ஃபயர் அண்ட் ஆஷ்’ படத்தைப் பார்த்தபோது, திரையரங்கில் ஒரு குழந்தையைப் போல குதூகலித்ததாக தெரிவித்தார் ராஜமவுலி.

ஹைதராபாத்தில் ‘அவதார்’ திரைப்படம் ஒரு வருடம் வரை ஓடியது குறித்தும் நினைவுகளை அவர் பகிர்ந்துக் கொண்டார். மேலும், பெரிய திரை அனுபவங்களுக்கு ‘அவதார்’ ஒரு மைல்கல் என்றும் இயக்குநர் ஜேம்ஸ் கேமரூனுக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ராஜமவுலியிடம் ஜேம்ஸ் கேமரூன் பேசும்போது, “‘வாரணாசி’ படத்தின் படப்பிடிப்பு அரங்கினை பார்வையிட விரும்புகிறேன். எப்போது புலிகள் உள்ளிட்டவற்றை வைத்து படப்பிடிப்பு நடத்துகிறீர்களோ அப்போது அழையுங்கள். உங்களுடன் பேசியதற்கு நன்றி.

உங்களுடைய படப்பிடிப்புக்கு வருகிறேன். என்னிடம் ஒரு கேமரா கொடுங்கள், உங்களுக்காக சில ஷாட்களை இரண்டாம் யூனிட் இயக்குநராக எடுத்துக் கொடுக்கிறேன்” என்று தெரிவித்தார். அதற்கு, விரைவில் ஹைதராபாத்தில் என்னுடைய படப்பிடிப்பு தளத்துக்கு உங்களை அழைக்கிறேன் என்று பதிலளித்தார் ராஜமவுலி.

# எம்.எஸ்.சுப்புலட்சுமி பயோ பிக்கில் சாய் பல்லவி?

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் எம்.எஸ்.சுப்புலட்சுமி பயோபிக்கில் நடிக்க சாய் பல்லவியிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.

உலகளவில் பிரபலமான கர்நாடக இசைக் கலைஞர் எம்.எஸ்.சுப்புலட்சுமி. இந்தியாவில் வழங்கப்படும் உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்ற முதல் இசைக் கலைஞர் இவர்தான். இவருடைய வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து படமொன்றை உருவாக்க இருக்கிறார்கள். இதனை கீதா ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

எம்.எஸ்.சுப்புலட்சுமி பயோபிக்கை இயக்குநர் கௌதம் தின்னூரி இயக்கவுள்ளார். இவர் ‘ஜெர்சி’, ‘மல்லி ராவா’ மற்றும் ‘கிங்டம்’ உள்ளிட்ட படங்களை இயக்கியவர். இதற்கான திரைக்கதை அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதில் எம்.எஸ்.சுப்புலட்சுமி கதாபாத்திரத்தில் நடிக்க சாய் பல்லவியிடம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். சாய் பல்லவியும் சம்மதம் தெரிவித்திருப்பதாக கூறப்படுகிறது.

விரைவில் அனைத்தும் முடிவானவுடன் முறையாக அறிவிக்கவுள்ளது படக்குழு. கீதா ஆர்ட்ஸ் நிறுவனம் தயாரிப்பில் வெளியான ‘தண்டேல்’ படத்தில் நாயகியாக நடித்தவர் சாய் பல்லவி. அந்த நட்பின் மூலம் எம்.எஸ்.சுப்புலட்சுமி பயோப்பிக்கிலும் நடிக்க அணுகியிருக்கிறார்கள்.









# மித்ரன் ஜவஹர் இயக்கத்தில் சண்முக பாண்டியன்

மித்ரன் ஜவஹர் இயக்கவுள்ள புதிய படத்தின் நாயகனாக சண்முக பாண்டியன் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

பொன்ராம் இயக்கத்தில் சரத்குமார், சண்முக பாண்டியன் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் ‘கொம்புசீவி’. டிசம்பர் 19ம் தேதி வெளியாகவுள்ள இப்படத்தின் விளம்பரப்படுத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இப்படத்தை ஸ்டார் சினிமாஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

‘கொம்புசீவி’ படத்தைத் தொடர்ந்து சண்முக பாண்டியன் நடிக்கவுள்ள அடுத்தப் படத்தையும் ஸ்டார் சினிமாஸ் நிறுவனமே தயாரிக்கவுள்ளது. இப்படத்தை மித்ரன் ஜவஹர் இயக்கவுள்ளார். இதற்கான முதற்கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. சண்முக பாண்டியன் உடன் நடிக்கவுள்ள நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வும் நடைபெற்று வருகிறது.

’திருச்சிற்றம்பலம்’, ‘யாரடி நீ மோகினி’, ‘உத்தம புத்திரன்’ உள்ளிட்ட பல்வேறு படங்களை இயக்கியவர் மித்ரன் ஜவஹர். தற்போது மாதவன் நடித்து வரும் ‘அதிர்ஷ்டசாலி’ படத்தை இயக்கி வருகிறார். அப்படம் பைனான்ஸ் பிரச்சினையால் தொடங்கப்படாமல் உள்ளது. அந்த இடைவெளியில் சண்முக பாண்டியன் நடிக்கும் படத்தினை தொடங்க திட்டமிட்டுள்ளார் மித்ரன் ஜவஹர்.

# தமிழ்நாட்டை ஆளுகின்ற தகுதி புரட்சித்தமிழர் எடப்பாடியருக்கே என்று மக்கள் தீர்மானித்து விட்டார்கள்: திமுக இப்பொழுது டெட் பாடி ஆகிவிட்டது 234 நமது லட்சியம் 210 வெல்வது நிச்சயம்

## தாம்பரத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக அம்மா பேரவை செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் ஆவேசம்

தாம்பரம், டிச.18-

கழகப் பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க தாம்பரம் மாநகராட்சியின் நிர்வாகத்தை கண்டித்தும், மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிட வலியுறுத்தியும் செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தாம்பரம் சண்முகம் சாலையில் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக புரட்சித்தலைவி அம்மா பேரவைச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் தலைமை வகித்தார்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டி.கே.எம்.சின்னையா கலந்துகொண்டார்.

மேலும் இக்கூட்டத்தில் , மாவட்டக் கழக துணைச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங், மாநில கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் டி.எஸ்.ரவிக்குமார்,

பெரும்பாக்கம் எ.ராஜசேகர், கே.எஸ். மலர்மன்னன், கோவிலம்பாக்கம் சி. மணிமாறன், டி.மோசஸ் ஜோஸ்வா, ஆர்.வினோத் குமார், ஏ.எம். பொன்னுசாமி, என்.சி. கிருஷ்ணன், டி.வனஜா துளசிதாஸ், சரஸ்வதி ஜெய்சங்கர், பி.கே.பரசுராமன், சபரீஷ் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் தாமு.துரைவேல், சாந்தி நாகேஸ்வரன், கே.ஆறுமுகம், பகுதி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.கூத்தன், ஏ.கோபிநாதன், சேலையூர் ஜி.சங்கர், இரா.மோகன், மாடம்பாக்கம் எம்.தேவேந்திரன், ஜெ.சீனுபாபு, மதுரைப் பாக்கம் எம்.பி.மனோகரன், எஸ்.வளையாபதி, ஆர்.எஸ். சுபாஷ், வெ.ஜெகநாதன், பா.அப்பு என்கிற வெங்கடேசன், த.ஜெயப்பிரகாஷ், ஆர்.அருணாசலம், இ.சம்பத்குமார், எம்.கஜா என்கிற கஜேந்திரன், செட்டிபுண்ணியம் சி.ஆர்.குணசேகரன், ஞா.சந்திரசேகர்ராஜா, நகரக் கழகச் செயலாளர்கள் எம்.ஜி.கே.கோபிகண்ணன், வி.ஆர்.செந்தில்குமார், மாவட்ட அணி செயலாளர்கள் பா.இராஜப்பா, ஜி.எஸ்.புருஷோத்தமன், ஜி.எம்.சாந்தகுமார், கே.பி.காசிராஜபாண்டியன், டாக்டர் பாலாஜி ஸ்ரீகாந்த், க.விஜயசங்கர், வேங்கடமங்கலம் டி.ரவி, பீ.சீனிவாசன், எம்.அரிகிருஷ்ணன், எம்.ஏ.சத்தியசீலன், பி.ஆர்.கணேஷ்குமார், கே.சி.வினோத்குமார், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் சி.சாய்கணேஷ், ஸ்டார் பிரபா, சுபாஷினி புருஷோத்தமன், வாணிசுரேஷ்பாபு, வாட்டர் கே.ராஜ், கிச்சா என்கிற கிருஷ்ணமூர்த்தி, 49வது வார்டு வட்டச் செயலாளர்கள் வாழை எம்.பெரியசாமி, வி.பாலாஜி, மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, அணி நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் உட்பட திரளான கழகத்தினர் கலந்துகொண்டனர்.

கழக புரட்சித்தலைவி அம்மா பேரவைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கண்டன உரையாற்றி பேசுகையில்,

எளிய முதல்வராக இலக்கணப் படைத்திட்ட எடப்பாடியார் ஆணைக்கு இணங்க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் தாம்பரம் மாநகராட்சியை கண்டித்து தமிழகத்தை ஆளுகின்ற சர்வாதிகார அரசை கண்டித்து அதிக அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தி களம் காண்கிறது செங்கல்பட்டு மேற்கு மாவட்டம்.

கொட்டுகிற மழையில் திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப தாம்பரம் மாநகராட்சியில் கூடியுள்ள மக்களை பார்க்கும் போது 2026 சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி மகத்தான வெற்றி பெற்று எடப்பாடியார் தலைமையில் ஆட்சி அமைக்கப்படும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

மழைவிட்டாலும் விடுமே தவிர இந்த ஸ்டாலின் ஆட்சியை வீட்டிற்கு அனுப்பாமல் இங்கே கண்டனம் முழக்கம் நிற்காது. இன்றைக்கு சொத்து வரி உயர்வு என்று சொன்னால் சென்னைக்கு அருகாமையில் இருக்கின்ற தாம்பரத்தில் சென்னையை விட 10 அல்லது 20% என சற்று குறைவாக இருக்கலாம் அல்லது சென்னைக்கு நிகராகவாவது இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கின்ற மாநகராட்சிகளிலேயே தாம்பரத்தில் சொத்து வரி அதிகமாக உள்ளது என்கிற கொடுமையை கண்டிக்கின்ற தைரியம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது என்பதை இந்த கண்டன ஆர்ப்பாட்டம் காட்டுகிறது.

பேரூராட்சிகள், நகராட்சிகள் கலைக்கப்பட்டு இன்றைக்கு மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. சொத்து வரி வசூலிக்கின்றீர்கள் அந்த வகையில் அடிப்படைக் கட்டமைப்புகளாக இருந்தாலும் சரி குடிநீர் வசதியாக இருந்தாலும் சரி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதில் மக்களுக்கு என்ன பயன்? என்று மாவட்ட



கழக செயலாளர் வாயிலாக மக்கள் இந்த ஆட்சியாளர்களுக்கு கண்டன குரலாக கேள்வி கேட்டிருக்கின்றார்கள்.

இன்றைக்கு நகராட்சித் துறை அமைச்சராக இருப்பவர் நேரு, கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு அமலாக்கத்துறை ஒரு கடிதம் எழுதுகிறது சுமார் 250 பக்கத்தில் நகராட்சி பேரூராட்சிகளில் வேலைவாய்ப்பிலே முறைகேடு செய்ததன் வாயிலாக 888 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகவும் ஆகையால் டிஜிபி எப்.ஐ.ஆர் பதிவு செய்ய வேண்டும் என்று அதைப் படித்துப் பார்த்த பொறுப்பு டிஜிபி வெங்கட்ராமனுக்கு நெஞ்சு வலியே வந்து விட்டது. இதுவரை எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்படவில்லை. கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு சுமார் 1028 கோடி அளவிற்கு ஆதாரத்துடன் அமலாக்கத்துறை மற்றொரு கடிதம் அனுப்புகிறது. இப்போது டிஜிபி நேராக மருத்துவமனைக்கு சென்றுபடுத்து விட்டார். ஏனென்றால் எப்.ஐ.ஆர் போடாமல் அமலாக்கத்துறை விடாது அதனால் டிஜிபி மருத்துவமனையில் சென்று படுத்துவிட்டார்.

புரட்சித்தலைவர் எம்ஜிஆர் புரட்சித் தலைவி அம்மா மற்றும் எடப்பாடியார் ஆட்சி காலத்தில் சிங்கமாக இருந்த காவல்துறை ஸ்காட்லாந்து போலீசுக்கு நிகராக கம்பீரமாக இருந்த காவல்துறை இன்றைக்கு ஸ்டாலின் ஆட்சியில் தலைகுனிந்து இருக்கிறது.

இங்கு அதிகாரத்தில் இருக்கின்ற ராஜாவைப் பார்த்து மக்களுக்கு என்ன செய்தீர்கள்? என்று மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் இராஜேந்திரன் கேட்கின்றார். மக்களுக்கு எதுவும் செய்யாத நீங்கள் இனி ராஜா அல்ல தாம்பரத்திற்கு கூஜா தான்.

அதிமுக பாஜக கூட்டணி ஏற்பட்ட பின்பு ஸ்டாலின் நடுக்கத்தில் உள்ளார். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணியை பார்த்து திமுக பயந்து போய் உள்ளது. 2026 சட்டமன்ற தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் எடப்பாடியார் தலைமையில் ஆட்சி அமைக்கும். இது மக்களின் தீர்ப்பு. நாம் பல்வேறு வகையில் ஆர்ப்பாட்டம், போராட்டம், திண்ணை பிரச்சாரம், பொதுக் கூட்டங்கள் என நடத்தி இருக்கின்றோம். இன்றைக்கு தமிழக வரலாற்றிலே தாய் தமிழக மக்களை காப்பதற்காகவும் தமிழ்நாட்டை மீட்பதற்காக கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையத்தில் எழுச்சி பயணத்தை தொடங்கினார். 175 சட்டமன்றத் தொகுதிகளுக்கு நேரடியாக சென்று விவசாயிகளை தொழிலாளர் தோழர்களை இளைஞர்களை மாணவர்களை தாய்மார்களை நேரடியாக சந்தித்து 12 ஆயிரம் கிலோமீட்டர் பயணம் செய்து ஒரு கோடிக்கும் மேலான வாக்காளர்களை சந்தித்து இன்றைக்கு 64 நாட்கள் முப்பத்தி நான்கு மாவட்டங்களிலே எழுச்சி பயணத்தை மேற்கொண்டு வெற்றி சரித்திரம் படைத்திருக்கின்றார். இதுபோல் ஸ்டாலின் அவர்களே உங்களால் மக்களை சந்திக்க முடியுமா?

மன்னாதி மன்னன் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் பாரத் ரத்னா எம்ஜிஆர் அவர்கள் ஏழை எளிய சாமானிய மக்களுக்காக துவங்கிய மக்கள் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம். இந்த இயக்கத்தை கருணாநிதியாலேயே எதுவும் செய்ய முடியவில்லை. கருணாநிதியே 13 ஆண்டுகள் வனவாசம் அனுப்பிய கட்சி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்

உதயநிதி ஸ்டாலின் அவர்களே உங்கள் கட்சியில் சுவாசம் இல்லாத காரணத்தால் தான் செயற்கை சுவாசம் கொடுக்க இந்த மண்டல மாநாட்டை நடத்துகின்றீர். திமுக தற்போது சுவாசம் இல்லாத டெட் பாடியாகத்தான் உள்ளது.

கோட்டரும், பிரியாணியும் கொடுத்து மண்டல மாநாட்டிற்கு ஆள் பிடிக்கிறது திமுக. திமுகவிற்கு எதிராக தாம்பரம் மாநகராட்சியில் மக்கள் கூடி உள்ளனர்.

ஒரு தொண்டன் நாடாள முடியுமா? என்று கேள்வி கேட்டவர்களுக்கு மத்தியில் நான்கரையாண்டு காலம் அம்மாவின் அரசை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் எடப்பாடியார். இந்தியாவில் எந்த மாநிலத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் எந்த முதல்வரையும் எடுத்துக் கொள்ளுங்கள் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை கொடுத்த எடப்பாடியாரை தவிர வேறு எவரும் அந்த வரலாற்று சாதனையை படைக்கவில்லை.

வருவாய்த்துறை வரலாற்றில் ஒரே ஆண்டில் ஆறு புதிய மாவட்டங்கள் உருவாக்கிக் கொடுத்தார் மற்றும் குடிமராமத்து திட்டம்,. 2000 அம்மா மினி கிளினிக், புரட்சித்தலைவி அம்மாவால் கொண்டு வரப்பட்ட மடிக்கணினி திட்டம், இருசக்கர வாகன திட்டம், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் இப்படி எண்ணற்ற திட்டங்கள் கழக ஆட்சியில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

ஸ்டாலினுக்கு தற்போது என்ன கவலை என்றால் உதயநிதியை எப்படியாவது முதலமைச்சர் ஆக ஆக்கிவிட வேண்டும். நான் உறுதியாக சொல்கிறேன் தங்கத்தை அழைத்து பஸ்பமாக கொடுத்தாலும் கோடி கோடியாக கொட்டிக் கொடுத்தாலும் மக்கள் முடிவெடுத்து விட்டார்கள் இனி தாய்த்தமிழ் நாட்டை ஆளுகின்ற தகுதி புரட்சித்தமிழர் எடப்பாடியாருக்கு மட்டுமே உண்டு என்று என்று தீர்மானமாக சொல்கின்றனர்.

525 வாக்குறுதிகளை நிறைவேற்றாத ஸ்டாலின் அவர்களே, மக்களுக்கு கூடுதல் போனஸ் ஆக கூடுதலாக சொத்துவரி உயர்வு, எட்டு ஆண்டு காலம் மத்திய அரசு அழுத்தம் கொடுத்த போது கூட ஒரு பைசா கூட சொத்து வரி உயர்த்தாத அரசு அம்மாவின் அரசு, எடப்பாடியார் அரசு. தற்போது மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது ஆனால் கழக ஆட்சியின் போது 8 ஆண்டுகளாக மின்சார கட்டணம் உயர்த்தப்படவில்லை. எத்தனை அழுத்தங்கள் வந்தாலும் சுமைகள் வந்தாலும் அதை அரசு தான் ஏற்க வேண்டும். அது மக்கள் மீது திணிக்க கூடாது .

நீங்கள் எல்லாம் கொட்டுகின்ற மழையிலே விடிவுகாலம் பிறக்கும் என்று கூறி கூடியிருக்கின்றார்கள். நேரு அமைச்சராக இருக்கும்போது அது நடக்காது. கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் முதல்வர் ஆனவுடன் மாவட்டக் கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் அதைப் பெற்றுத் தருவார்.

234 நமது லட்சியம் 210 வெல்வது நிச்சயம். அந்த உரிமைக் குரலோடு உரத்த குரலோடு சர்வாதிகார ஆட்சியை குடும்ப ஆட்சியை வாரிசு அரசியலுக்கு முடிவுரை எழுதி புரட்சித் தமிழர் எடப்பாடியார் தலைமையில் மக்கள் ஆட்சிக்கு மகுடம் சூட்டுவோம்.

இவ்வாறு கழக புரட்சித்தலைவி அம்மா பேரவைச் செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசினார்.

# "எஸ்ஐஆரில் 65 லட்சம் பேரை புதிதாக சேர்க்க முயற்சி" -வைகோ கண்டுபிடிப்பு

சென்னை, டிச.18-

"எஸ்ஐஆர் என்பது ஜனநாயக மோசடி. 85 லட்சம் பேரை நீக்கிவிட்டு 65 லட்சம் பேரை புதிதாக இணைக்கும் மோசடி வேலை நடக்கிறது" என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.



மதிமுக பொதுச்செயலாளர் வைகோ போதைப் பொருள் ஒழிப்பு, சாதி மோதல் தடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜன.2ம் தேதி முதல் 12ம் தேதி வரை சமத்துவ நடைபயணம் மேற்கொள்கிறார். இந்நிலையில் அவர் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முதல்வர் ஸ்டாலினை சந்தித்து நடைபயணத்தை தொடங்கி வைப்பதற்கான அழைப்பிதழை வழங்கினார்.

பின்னர் வைகோ செய்தியாளர்களிடம் கூறியதாவது: போதைப் பொருட்கள், கஞ்சா குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், எச்சரிக்கை செய்யும் விதத்திலும், தமிழகத்தில் சாதி, மத மோதல்களுக்கு இடமில்லை என்பதை வலியுறுத்தியும் சமத்துவ நடைபயணத்தை வரும் ஜன.2ம் தேதி மேற்கொள்ள உள்ளேன். 950 பேர் இதில் பங்கேற்கின்றனர். பெரும்பாலான கல்லூரி மாணவர்கள் இதில் பங்கேற்கிறார்கள்.

நடைபயணத்தை திருச்சி உழவர் சந்தையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். தொடக்க நிகழ்வில் கே.எம். காதர் மொகிதீன், செல்வப்பெருந்தகை, திருமாவளவன், கமல்ஹாசன் ஆகியோர் பங்கேற்கிறார்கள். அதன் பின்னர் விராலிமலை, மேலூரில் நடைபெறும் மாநாட்டில் தோழமைக் கட்சியினர் பங்கேற்கவுள்ளனர். ஜன.12ம் தேதி மதுரையில் நடைபெறும் நிறைவு நிகழ்ச்சியில் கவிஞர் வைரமுத்து, நடிகர் சத்யராஜ் வாழ்த்து தெரிவிக்கின்றனர். கட்டுப்பாடாகவும், போக்குவரத்து ஒழுங்குடனும் இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படும்.

2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி தான் மகத்தான வெற்றி பெறும். திமுக தனி பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமரும். யார் யாரோடு கூட்டணி அமைத்தாலும், யார் எந்த முயற்சி செய்தாலும் மக்கள் மன்றத்தில் திமுக கூட்டணிக்குத்தான் ஆதரவு உள்ளது. புதிதாக அரசியல் பிரவேசம் செய்தவர்கள், ஏற்கெனவே எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் திமுகவை எதிர்கொண்டு வெற்றி பெற முடியாது. திமுக கூட்டணி வெற்றிக்கு நாங்கள் பாடுபடுவோம்.

சட்டசபை தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெறும்; இப்போது அதற்கான தேவையில்லை. எஸ்ஐஆர் என்பது ஜனநாயக மோசடி, 85 லட்சம் பேரை நீக்கிவிட்டு 65 லட்சம் பேரை புதிதாக இணைக்கும் மோசடி வேலை நடக்கிறது. என்ன முயற்சி செய்தாலும் அவர்களால் தமிழகத்தில் வெற்றி பெற முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# குடிமக்களை பாதுகாப்பது அரசனின் உயரிய கடமை 'மனுஸ்மிருதி'யை சுட்டிக்காட்டி நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவு



மதுரை, டிச.18-

வெளிநாடுகளில் பணியாற்றும் இந்தியர்கள், நிறுவனங்களிடம் இருந்து இழப்பீடு பெறுவதற்கு சட்ட உதவிகளை வழங்குவதற்கான கொள்கையை மத்திய அரசு வகுக்க வேண்டும் என உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு பிறப்பித்துள்ளது. விருதுநகர் மாவட்டம் சிவகாசியை சேர்ந்த மலர்விழி, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: என் கணவர் மாரிமுத்து மத்திய ஆப்பிரிக்காவுக்கு 2021 ம் ஆண்டு தீப்பெட்டி தொழிற்சாலைக்கு வேலைக்கு சென்றார். அங்கு எதிர்பாராத விதமாக உயிரிழந்தார்.என் கணவர் இறப்புக்கு கேமரூன் நாட்டுத் தொழிற்சாலை இந்திய மதிப்பில் 15 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குவதாக தெரிவித்தது. இந்த இழப்பீட்டு தொகையை உயர்த்தி வழங்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன் விசாரணைக்கு வந்தது. விசாரணை முடித்து நீதிபதி பிறப்பித்துள்ள உத்தரவில், "மன்னன் என்பவன் மக்களை மகிழ்ச்சியாகவும் வளமாகவும் வைத்திருக்க வேண்டும். மகாபாரதத்தில் வருமானத்தில் 6ல் ஒரு பங்கைப் பெற்றாலும் மக்களைப் பாதுகாக்கத் தவறிய மன்னன் பாவியாகிறான்" என்று கூறப்பட்டுள்ளது. தற்போது இங்கு மன்னனாக இருப்பது அரசுகள். அரசாங்கம் மக்கள் நலன் சார்ந்து செயல்பட வேண்டும் என மனு சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேதான் புத்த மதத்திலும் குறிப்பிடப்படுகிறது. அரசாங்கம் வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு பணப் பரிமாற்றங்கள் மூலம் பெரும் அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது. புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து அரசுகள் நன்மைகளைப் பெறும்போது, வெளிநாட்டு வேலைவாய்ப்பால் ஏற்படும் பிரச்சினைகள் எழும்போது அவர்களை மீட்க விரைந்து செயல்பட்டு உரிய இழப்பீடு கொடுப்பதும் கடமையாகும். எனவே தற்போதுள்ள கால சூழலுக்கு ஏற்ப சட்டங்களில் சில திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டும். தனது குடிமக்கள் பாதுகாப்பு குறித்து மத்திய அரசு கொள்கை சார்ந்த சட்ட திட்டத்தை வகுக்க வேண்டும். இந்த வழக்கில் பாதிக்கப்பட்டுள்ள மனுதாரர் ஏழையாக உள்ளார். எனவே அவர் வாழ்வாதாரம் பாதுகாக்க பட வேண்டும். இதற்காக மத்திய அரசு சட்டப் போராட்டத்தையும் நடத்த தயாராக இருக்க வேண்டும். இழப்பீடு வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் இந்திய தூதரகம் எடுக்க வேண்டும்." என உத்தரவிட்டார்.



# காட்பாடி முன்னாள் நகர மன்ற உறுப்பினர் அதிமுக ரிஷிகுமார் பிறந்தநாள் விழா

வேலூர், டிச.18-

வேலூர் மாவட்டம், காட்பாடி முன்னாள் நகர மன்ற உறுப்பினரும், தொழிலதிபருமான அதிமுகவைச் சேர்ந்த ரிஷிகுமாரின் பிறந்தநாள் விழா, வேலூர் புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் அரசியல் கட்சி தலைவர்கள், தொழிலதிபர்கள், பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு, அவருக்கு பொன்னாடை போர்த்தி, மலர்மாலைகள் மற்றும் சந்தன மாலைகள் அணிவித்து, பூங்கொத்துகள் மற்றும் புத்தகங்கள் வழங்கி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர். தொடர்ந்து கேக் வெட்டி இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் அதிமுக சார்பில் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் எம்.ஏ.ராஜா, மாவட்ட இலக்கிய அணி இணை செயலாளர் சுரேஷ், அம் மா மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் காட்பாடி எஸ்.ராஜா, அதிமுக மகளிர் அணி நிர்வாகி ஜெயல ட்சுமி, சொற்பொழிவாளர் இலவம்பாடி கவிஞர், லக்குமிபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சால்வை மற்றும் மலர் மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர். மேலும் அரசியல் கட்சி தலைவர்கள், தொழிலதிபர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் உள் ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மேலும், தனது பிறந்தநாளை முன்னிட்டு முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ரிஷிகுமார், ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி, அறுசுவை உணவும் வழங்கினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161